R4787

## THE CALL TO DIVINE SERVICE

## தெய்வீக ஊழியத்திற்கு அழைப்பு

"அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்." ஏசாயா 6:8

இன்றைக்கு நாம் ஏசாயாவின் காட்சியை தியானிப்போம். எருசலேமில் உள்ள ஆலயம் அல்லது யேகோவாவின் வீடு என்று அழைக்கப்படுகிறதே காட்சியின் தோற்றமாக இருக்கிறது. ஆனால் பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம், கிருபாசனம், தூபபீடம், சமூகத்து அப்பத்துடனான மேஜை மற்றும் பொன் குத்துவிளக்கு எல்லாம் மாற்றப்பட்டு, ஒரு மகிமையான சிங்காசனம் அங்கே இருந்தது. அதில் கர்த்தர் வீற்றிருந்தார். அவருக்கு எல்லா பக்கங்களிலும் அவரது குணலட்சணங்களை குறிப்பிடுகிற நான்கு சேராபீன்கள் நின்றார்கள். ஆலயம் தேவனைப் பின்பற்றுகிறவர்களால் நிறைந்திருந்தது. ஆலயமானது மகிமையின் வெளிச்சத்தினால் நிறைந்திருந்து. இரண்டு சேராபீன்கள், "சேனைகளின் யேகோவா பரிசுத்தர், பரிசுத்தர்" என்று கூறினார்கள். மற்ற இரண்டு சேராபீன்களும் மற்ற பக்கத்திலிருந்து, "பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது" என்று கூறினார்கள். இதைத் தொடர்ந்து வாசல்களின் நிலைகள் அசைந்து, மகிமையை மங்கலாக்கி ஆலயம் புகையினால் நிறைந்தது.

### முழு பூமியும் கர்த்தின் மகிமையால் நிறைந்திருப்பதாக

இந்த காட்சியின் கருத்தை நாம் இயேசுவின் வார்த்தைகளிலிருந்து பெறுகிறோம். அவர் இந்த காட்சியை நேரடியாக நமக்கு குறிப்பிடுகிறார். (யோவான் 12:41) தெய்வீக வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக இயேசு தமது முதலாம் வருகையில், யோகோவா தேவனின் வாக்குத்தத்தத்தின்படி (எரேமியா 31:31) தம்மை இஸ்ரயேலரிடம் புதிய உடன்படிக்கையின் மாபெரும் மத்தியஸ்தராக மாபெரும் மகிமையின் இராஜாவாக காண்பித்தார். இயேசு ஏற்றுக்கொள்ளப்படமாட்டார் என்பதை தேவன் அறிந்திருந்தார். எனினும் பலி ஏற்பாடு செய்யப்பட்டது. மேசியா ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அவர் தமது மகிமையையும் அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டிருந்தால், ஆவிக்குரிய ராஜ்யத்தில் அவரோடு இணைந்திருக்கக்கூடிய மணவாட்டி வகுப்பாரின் எண்ணிக்கை நிறைவடையும்படி யூத இனத்திலிருந்து போதுமான எண்ணிக்கையில் அவரை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்று பொருள் படும். அப்படியென்றால் மேசியாவின் மகியைமான ராஜ்யத்தில் அவருக்கு உடன் சுதந்தராராக இருக்கும்படி புற ஜாதியாருக்கு அழைப்பு கொடுத்திருக்க முடியாது. இஸ்ரயேலர்கள் முழு ஆசீர்வாதத்தையும் எடுத்துக்கொண்டிருப்பார்கள். உடனே ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். இஸ்ரயேலர் தேசம் மேசியாவை ஏற்றுக்கொண்டு உடனே சகல ஜாதிகளுக்கும் தெய்வீக ஆசீர்வாதத்திற்கு வழியாக ஆகியிருக்கும்.

பூமியனைத்தும் கர்த்தருடைய மகிமையால் நிறைந்திருக்கும் என்று அந்த குரல் அறிவித்த போது, இந்த செய்தியைப் பெற்றுக்கொள்ள இந்த உலமானது தயாராக இல்லை என்பதை வாசல்களின் நிலைகளை அசைத்ததும், மகிமையின் காட்சியை மங்கச் செய்ததும் குறிப்பிடுகிறது. இதன் நிறைவேறுதலை, இந்த மகிமைக்கு வாசலாக இருக்கும் யூத தேசம் சரியான நிலைமையில் இல்லை என்ற உண்மையில நாம் காண்கிறோம். உலகிற்கு இராஜாதி இராஜாவின் மகிமையை அறிவிப்பதற்கு உடனே இன்னொரு வாசல் ஏற்படுத்தப்பட வேண்டும். ஏதாவது ஒன்று அசைக்கப்படுகிறது என்றால், நிழலாக அது நிலையற்ற தன்மையை -6- குறிப்பிடுகிறது என்றும் அதை நீக்கிவிட்டு இந்த இடத்தில் இதைவிட மேலானது நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும் பரிசுத்த பவுல் அறிவிக்கிறார். யூத தேசமானது அதன் சாதகமான நிலைமையிலிருந்து நீக்கப்பட்டது. ஒரு புதிய வாசல், தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான ஒரு புதிய வழியானது ஸ்தாபிக்கப்படுவது நடைமுறைப் படுத்தப்படுகிறது.

### "நீங்கள் ஒரு பரிசுத்த ஜாதி"

கனத்துக்குரிய நிலைக்கு இஸ்ரயேலைத் தவிர வேறு எந்த தேசமும் உலகில் தகுதியானதாக காணப்படவில்லை. அதைத் தொடர்ந்து தேவன், பரிசுத்தவான்கள் அடங்கிய ஒரு புது ஜாதியை ஏற்படுத்த தொடர்ந்து செயல்பட்டார். பரிசுத்த பேதுரு விளக்குகிறதாவது: "நீங்கள் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும் இருக்கிறீர்கள்." (1பேதுரு 2:9) முதலாவது பரத்துக்குரிய, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட புதிய ஜாதியின் உட்கருவாக பரிசுத்தமான யூதர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் தெரிந்துகொள்ளும் செயல்முறைகள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதன் முடிவில் முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பரிசுத்த ஜாதி நிறைவடையும். பிறகு எல்லாம் தயார் நிலையில் இருந்து, பூமி அனைத்தும் யேகோவா தேவனின் மகிமையினால் நிறைந்திருப்பதாக என்ற கட்டளை சென்று உலகம் ஆசீர்வதிக்கப்படும். இந்த மாபெரும் வேலையில் மாம்சீக இஸ்ரயேலரும் ஒரு பங்கை பெறுவார்கள்.

காட்சியின் சத்தத்தால் வாசலின் நிலைகள் அசைந்து புகையினால் நிறைந்தது, கர்த்தருடைய மகிமைக்கு தானும் தேவன் தொடர்பு கொண்டிருக்கும் மற்றவர்களும் தயார் நிலையில் இல்லை என்பதை உணர்ந்து ஏசாயா தீர்க்கதரிசி கத்துகிறார். கர்த்தரின் கண நேர மகிமை அவரது சொந்த அபூரணத்தையும் அயலகத்தாரின் அபூரணத்தையும் காண்பித்தது.

இயேசுவின் போதனையை ஏற்றுக்கொண்டவர்களின் நிலைமையும் இதே போல இருந்தது. பிரமாணமானது மிகவும் அதிகமாக பிரகாசித்து ஜொலித்தது. தங்களது செயல்கள், வார்த்தைகள் மற்றும் சிந்தையிலும் தாங்கள் நினைத்திருந்ததைக்

காட்டிலும் அதிகமாக மீறியிருக்கிறதை கண்டார்கள். ஏசாயா குறிப்பிட்டது போல, பரிசுத்தமானவர்கள் காரியங்களை இருதயத்துக்கு எடுத்துச் சென்று கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தினார்கள். தாங்கள் மனிதருக்கு போதிப்பதற்கு தகுதியற்றவர்கள் என்று உணர்ந்து கொண்டார்கள். ஆனால் முழு யூத ஜாதியும் மற்றவர்களும் அபூரணர்கள் என்பதையும் எந்த செய்தியையும் எடுத்துச் செல்ல அவர்களது உதடுகள் தகுதியற்றவை என்பதையும் உணர்ந்தார்கள்.

பலிபீடத்திலிருந்து கொண்டு வரப்பட்ட நெருப்பு தழலால் ஏசாயாவின் உதடுகள் தொடப்பட்டது. இஸ்ரயேலில் பரிசுத்தவான்களும் இந்த சுவிசேஷ யுகத்தில் மற்ற பரிசுத்தவான்களும் அவர்களது உதடுகளில் பரிசுத்தத்தை அடைந்து தெய்வீக அழைப்பை அறிவித்தார்கள். “நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்.” (ரோமர் 12:1) தேவனுடைய பலிபீடத்திலிருந்து வந்த நெருப்புத் தழல் என்ற இந்த செய்தி கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக இங்கேயும் அங்கேயும் போயிருக்கிறது. இது நம்மை பாவத்திலிருந்து பரிசுத்தம் பண்ணுவதை மாத்திரமல்ல தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டியதையும் போதிக்கிறது.

## “இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்”

ஏசாயா பரிசுத்த ஜனங்களுக்கு தொடர்ந்து ஒரு நிழலாக இருந்தார். தேவன் இந்த கிருபையில் செய்தியையும் பலி கொடுப்பதற்கான அழைப்பையும் கேட்க காதுள்ளவர்கள் அனைவருக்கும் கொடுக்க தீர்மானித்தார். ஏசாயாவினால் நிழலாக காண்பிக்கப்பட்ட, இந்த யுக முழுவதும் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் கூறுகிறதாவது: “கர்த்தாவே, இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்.”

மேலும் இந்த ஏசாயா வகுப்பாரின் செய்தி பிரபலமடையாது என்று நமது பாடம் மேலும் காண்பிக்கிறது. சிலர் கேட்பார்கள்; சிலர் பார்ப்பார்கள்; சிலர் பாவமன்னிப்பின் ஆசீர்வாதத்தையும் பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலையும் பெறுவார்கள். ஆண்டவரும் அவரது அப்போஸ்தலர்களும் இந்த அறிவிப்பை தொடங்கினார்கள். அதுவே இந்த நாளிலும் தொடருகிறது.

ஆனால் நாம் இதில் மனம் தளரக்கூடாது. இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றுகிற, இருதயத்தில் பரிசுத்தமுள்ள சிறுமந்தை மட்டுமே இந்த ஆசீர்வாதத்தை பெற்று ராஜ்ய வகுப்பாரை அமைக்க தயாராயிருப்பார்கள். புது வாசலை, மனுக்குலமும் தெய்வீக பரிசுத்தமும் இணைகின்ற வழியை அமைப்பார்கள்.

சபையானது எப்பொழுது நிறைவடையும் கர்த்தரின் மகிமையானது எப்பொழுது இஸ்ரயேலரின் மேல் பிரகாசிக்கும், அவர்கள் மூலமாக சகல ஜாதிகள், கோத்திரங்கள் மற்றும் பாஷைக்காரர்கள் மேலும் ஆயிரம் வருடமளவும் பிரகாசிக்கும் என்பதற்கு இஸ்ரயேலின் அனுபவங்கள் ஒருஅளவு கோலாக காண்பிக்கிறது. அந்த அளவு கோல் இஸ்ரேல் தேசம் பாழானதையும் முற்றிலும் பலனற்றதாக ஆனதையும், அவர்கள் தேசத்திலிருந்து நீக்கப்பட்டதையும் கூறுகிறது. பாடத்தில் கடைசி வசனம் முடிவில் வேரிலிருந்து ஒருபரிசுத்த வித்து, ஒரு பரிசுத்த ஜனம், தெய்வீக கிருபையின் கீழ் முளைத்து எழும்பும் என்று கூறுகிறது. இஸ்ரயேலின் இந்த பரிசுத்தமானவர்கள், பழைய ஏற்பாட்டு கால விசுவாசிகள் திரைக்கு இந்த பக்கம் உயிர்த்தெழுந்து மேசியாவின் ராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகள் என்கிற அவர்களது வெகுமதிக்குள் நுழைவார்கள். (எபிரேயர் 11:38-40; சங்கீதம் 148:11) இந்த பிரபுக்களிடம் உண்மையுள்ள விசுவாசமுள்ள, பரிசுத்தமுள்ள யூதர்களை உட்கருவை மேசியாவின் ராஜ்யத்தின் ஆரம்பத்தில் பூமிக்குரிய பகுதியில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.